புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2050 | ஜுன் 6, 2019 | புரட்சி 18 | முழக்கம் 21 | விலை: ரூ.3.00

## கழக இளைஞர்கள் தீச்சட்டி ஏந்தி அணிவகுத்து வந்தனர்

# மேட்டூரில் கொட்டும் மழையில் நாத்திகர் பேரணி






மே 25, 2019 அன்று மேட்டூர் ஆர்.எஸ். பகுதியில் மூடநம்பிக்கை ஒழிப்புப் பேரணியும் பெரியார் அம்பேத்கர் பிறந்த நாள் விழா மற்றும் அன்னை மணியம்மையார் நூற்றாண்டு விழாவும் எழுச்சியுடன் நடை பெற்றது. நாமக்கல், சேலம், ஈரோடு, திருப்பூர், கோவை, பொள்ளாச்சி, சென்னையிலிருந்து கழகத் தோழர்கள் பங்கேற்றனர்.

உயர்நீதிமன்றம் வழியாக உத்தரவு பெற்று நடந்த நாத்திகர் பேரணி மேட்டூர் கேம்ப் பகுதியில் தொடங்கி ஆர்.எஸ். பேருந்து நிறுத்தத்தில் முடிவடைந்தது. பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பேரணியை மாலை 4 மணியளவில் கொடி அசைத்துத் தொடங்கி வைத்தார்.

பேரணி 2 மணி நேரம் நடந்தது. பேரணி வரும்போதே மழை கொட்டத் தொடங்கிவிட்டது. கொட்டும் மழையில் ஒரு மணி நேரம் தோழர்கள் மூடநம்பிக்கை ஒழிப்பு முழக்கங்களை எழுப்பி வந்தனர். பெண்களும் ஆண்களுமாக இளைஞர் கூட்டம். பேரணிக்காகவே தயாரிக்கப்பட்ட 'டி சட்டைகளை' அணிந்து முழக்கமிட்டு வந்த காட்சியை வீதியின் இருபுறங்களிலும் மக்கள் திரளாகக் கூடி நின்று பார்த்தனர். இளம் பெண்கள் கைகளில் தீச்சட்டிகளை ஏந்தி பகுத்தறிவு முழக்கமிட்டு வந்தனர். சிலம்பம், தீப்பந்தம் சுழற்றுதல் போன்ற வீர விளையாட்டுகளும் இடம் பெற்றிருந்தன. பெண்களும் சிலம்பு சுற்றினார்கள். பேரணியின் இறுதியில் புத்தர், பெரியார், அண்ணா, அம்பேத்கர், காமராசர், கலைஞர் வேடமணிந்து தனித் தனி டிரக்குகளில் வந்தனர். மூடநம்பிக்கை ஒழிப்புப் பேரணியை இந்தத் தலைவர்கள் பார்வையிடுவது போல் இருந்தது. பறை இசையும் முரசும் பேரணியில் முழங்கின. அலகு குத்தி கார் இழுத்து வந்தனர்.

கொளத்தூர் அருகே உள்ள அய்யம்புதூரில் முதன்முறையாக பெரியாரியல் பயிற்சி பெற்ற இளம் தோழர்கள் பெண்களும் ஆண்களும் பயிற்சி முடிந்த அடுத்த நாளே அலகுகுத்தி தீச்சட்டிகளை ஏந்தி பேரணியில் வந்தது குறிப்பிடத்தக்கது.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, பொருளாளர் துரைசாமி, பரப்புரைச் செயலாளர் பால் பிரபாகரன் உள்ளிட்ட கழகப் பொறுப்பாளர்கள் பேரணியில் இறுதி வரை நடந்து வந்தனர்.

நான்கு தோழர்கள் முதுகில் அலகு குத்திக் கொண்டு பறவையைப் போல தொங்கிக் கொண்டு வந்தனர். கடவுள் சக்திக்கும் அலகு குத்துதலுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று இதன் வழியாக பார்வையாளர்களுக்கு உணர்த்தினர்.

பேரணியின் இறுதியில் ஆர்.எஸ். பேருந்து நிறுத்தம் அருகே எழில்மிகு மேடையில் விழா நிகழ்ச்சிகள் தொடங்கின. அ. அனிதா வரவேற்புரை யாற்றினார். மேட்டூர் ஆர்.எஸ். பகுதி கழகத் தலைவர் பொன். முரளிதரன் தலைமை தாங்கினார். மேடையில் பள்ளி மாணவர்களின் 'ஜிம்னாசிய' உடற்பயிற்சிகளுடன் நிகழ்ச்சிகள் தொடங்கின. சேலம் மேற்கு மாவட்டத் தலைவர் சூர்யகுமார், மாவட்ட செயலாளர் கி.கோவிந்தராசு, மா. மோகனா முன்னிலை வகித்தனர்.

அன்னை மணியமையார் குறித்து ஏராளமான வரலாற்றுச் செய்திகளுடன் இரா. மதிவதனி உரையாற்றினார். பரப்புரை செயலாளர் பால். பிரபாகரன், 'பகுத்தறிவுப் பாதை செல்லுங்கள்' என்ற தலைப்பிலும், விடுதலை இராசேந்திரன், 'நூற்றாண்டு காணும் அன்னை மணியம்மையார்' என்ற தலைப்பிலும், ஆனூர் ஷாநவாஸ் (விடுதலை சிறுத்தைகள் கட்சி) 'இன இழிவு நீக்கிய ஈரோட்டுப் பெரியார்' என்ற தலைப்பிலும், கழகத் தலைவர் கொளத்தூர் மணி 'அடிமை விலங்கொடித்த புரட்சியாளர் அம்பேத்கர்' என்ற தலைப்பிலும் உரையாற்றினார்.

பேரணி விழா நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து நடத்திய தலைமைக் குழு உறுப்பினர் மேட்டூர் சக்தி தொகுப்புரை வழங்கினார். பகுதி கழகச் செயலாளர் கு. விவேக் நன்றி கூறினார். விழா மேடையில் கழகத் தலைவர், பொதுச் செயலாளரிடம் தோழர்கள் கட்டமைப்பு நிதி வழங்கினர். மேடைக்கு எதிரே பெரியார்-அம்பேத்கர்-காமராசர்-புத்தர்-அண்ணா-கலைஞர் ஆகியோரின் சிந்தனைகளுடன் அவர்களின் படங்கள் 'எல்.ஈ.டி.' திரையில் திரையிடப்பட்டன. தோழர்கள் அனைவருக்கும் இரவு மாட்டுக்கறி உணவு வழங்கப்பட்டது. மேட்டூர் ஆர்.எஸ். பகுதி கழகத் தோழர்கள் பேரணி விழாக்களை சிறப்புடன் ஏற்பாடு செய்திருந்தனர்.

**– நமது செய்தியாளர்**











## மருத்துவர் மாணவர் சேர்க்கையில் பிற்படுத்தப்பட்டோருக்கு அநீதி

அகில இந்திய அடிப்படையில் மருத்துவர் சேர்க்கையில் பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டை இரத்து செய்தது பா.ஜ.க. ஆட்சி.

அகில இந்தியத் தொகுப்பு மருத்துவ இடங்களில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கு அநீதி இழைப்பது சரியல்ல. அவர்களுக்கு 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டை உடனடியாக வழங்கிட வேண்டும். மத்திய அரசுக்கு சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இது குறித்து இச்சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் விடுத்துள்ள செய்தி.

அகில இந்தியத் தொகுப்பு மருத்துவ இடங்களுக்கான மாணவர் சேர்க்கை நீட் நுழைவுத் தேர்வு மூலம் நடத்தப்படுகிறது. இந்தியா முழுவதும் ஏறத்தாழ 4600 எம்.பி.பி.எஸ். மருத்துவ இடங்கள் அகில இந்தியத் தொகுப்பில் உள்ளன. பல்வேறு கட்டப் போராட்டங்களுக்குப் பிறகு, இந்த இடங்களில் எஸ்.சி, எஸ்.டி பிரிவினர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. ஆனால் இதர பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட வில்லை.

பல முறை இது குறித்த கோரிக்கைகளை முன்வைத்த பிறகும், மத்திய அரசு இதர பிற்படுத்தப்பட்டோருக்கு அகில இந்திய தொகுப்பில் இட ஒதுக்கீடு வழங்கிட நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் இதர பிற்படுத்தப்பட்டப் பிரிவினருக்கு கிடைக்க வேண்டிய 1242 மருத்துவ இடங்கள் ஒவ்வொரு ஆண்டும் கிடைக்கவில்லை. இந்த 1242 மருத்துவ இடங்களிலும் அதிக அளவில் முன்னேறிய வகுப்பினரே சேர்ந்து வருகின்றனர்.

இது சமூக நீதிக்கு எதிரானது.

இந்நிலையில் முன்னேறிய வகுப்பில் உள்ள ஏழைகளுக்கு 10 விழுக்காடு இட ஒதுக்கீடை நடப்பு கல்வியாண்டிலேயே வழங்கிட தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு ,நீட் நுழைவுத் தேர்வை நடத்தும் தேசிய தேர்வு முகமைக்கு மத்திய அரசு ஆணையிட்டுள்ளது. இது இதர பிற்படுத்தப்பட்டப் பிரிவினரை மிகக் கடுமையாக பாதிக்கும்.

இதர பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டை வழங்காமல், முன்னேறிய வகுப்பில் உள்ள, பொருளாதார ரீதியில் பின்தங்கியவர்களுக்கு 10 விழுக்காடு இட ஒதுக்கீடை வழங்குவது, இதர பிற்படுத்தப் பட்டோருக்கு இழைக்கும் மாபெரும் துரோகமென சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் கருதுகிறது.

எனவே, இதர பிற்படுத்தப் பட்டோருக்கு அகில இந்தியத் தொகுப்பு மருத்துவ இடங்களில் 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென , சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் மத்திய அரசை கேட்டுக் கொள்கிறது என்று அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மருத்துவத் துறையில் இளநிலைப் பிரிவில் இந்தியாவிலுள்ள மொத்த அரசு மருத்துவக் கல்லூரிகள் 216; அதிலுள்ள MBBS இடங்கள் 30,455. இவற்றில் தமிழ்நாட்டில் மட்டும் 25 கல்லூரிகள் (முதல் மாநிலம்) மற்றும் 3,250 இடங்கள் உள்ளன. இவற்றில் 15 சதவீதம் அகில இந்திய தொகுப்பிற்கு வழங்கப்படும், ஆக 4,600 இடங்கள் இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களும் மத்திய தொகுப்பிற்குத் தருகின்றன.

தமிழகம் மட்டும் 490 இடங்களைத் தருகிறது (வேறு எந்த மாநிலத்தையும்விட அதிகம்). இந்த மொத்தமுள்ள 4,600 இடங்களில் மத்திய அரசு SC/ST க்கான இடஒதுக்கீட்டை 22.5 சதவீதம் வழங்குகிறது. ஆனால் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இடஒதுக்கீட்டை மட்டும் ஒவ்வொரு ஆண்டும் வழங்குவதில்லை. ஏனெனில் இந்த 4,600 இடங்களும் ஒரு கல்லூரியைச் சார்ந்தவை அல்ல, அது ஒரு கூட்டுத் தொகுப்பு தான்.

எனவே இதர பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டை அமல்படுத்த முடியாது என மோடி அரசு உச்சநீதிமன்றத்தில் வாதிட்டுக் கொண்டிருக் கிறது.

அதே அரசு 10 சதவீதம் பொருளாதாரத்தில் பின் தங்கிய உயர் ஜாதியினருக்கான இடஒதுக்கீட்டை (EWS quota) இந்த வருடமே இந்த 4,600 இடங்களில் அமல்படுத்த வேண்டும் என்று NATIONAL TESTING AGENCY மற்றும் MCI-க்கு ஆணையிட்டுள்ளது.

இதன் மூலம் 4600 இடங்களை பார்ப்பனர் மற்றும் உயர் ஜாதியினருக்கு உறுதி செய்தாகிவிட்டது. இதர பிற்படுத்தப்பட்டோருக்கு கிடைக்க வேண்டிய 1242 இடங்களை அளிக்காமல் கொல்லைப்புறம் வழியாக அதையும் பார்ப்பனர்களுக்கே தாரை வார்க்கின்றது.

# இனமும் மொழியும் அடையாளங்கள்தான்
# கோட்பாடுகளே அனைத்தையும் தீர்மானிக்கும்

**தொல். திருமாவளவன்**



இனத் தூய்மைப் பேசுகிறவன் – ஜாதித் தூய்மை பேசுகிறான்; ஜாதித் தூய்மை பேசுகிற சுத்தத் தமிழன்தான் இந்துத்துவத்துக்கும் ஜாதி வெறிக்கும் துணை போகிறான் என்று குறிப்பிட்டார், விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல் திருமாவளவன்.

பெரியார் திடலில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவரின் இந்தத் தெளிவான ஆழமான பேச்சு சமூக ஊடகங்களில் பரவலாகி வருகிறது. உரையின் முக்கியத்துவம் கருதி ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ பதிவு செய்கிறது.

பெரியாரைப் போய் அவர் தமிழர் இல்லை என்று சில அரைவேக்காடுகள் சொல்லிக் கொண்டிருக்கின்றனர். தந்தை பெரியார் தமிழர் அல்ல கன்னடர் என்று அவர்கள் சொல்வதை அங்கீகரித்தால் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களையே புறந்தள்ள வேண்டிய நிலை வரும். விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கும் தமிழ் உணர்வு உள்ளது. தமிழ் உணர்வு என்பது வேறு, இனத்தூய்மை என்பது வேறு. தமிழனுக்கு ஆட்சி அதிகாரம் வேண்டும் என்பது இன உரிமை. தமிழனின் தாய் மொழியான தமிழுக்கு மரியாதை வேண்டும் என்பது இன உரிமை. தமிழனுக்கென்று ஒரு நாடு ஈழம் பிறக்க வேண்டும் என்பது இன உரிமை. அது இன உரிமையில் இருந்து உருவாகின்ற களங்கள். ஆனால், இவன் தமிழனல்ல இவன்தான் சுத்தத் தமிழன் என்றால், சுத்தத் தமிழன் தான் தருமபுரியிலே தீ வைத்தான். சுத்தத் தமிழன் தான் நாட்டுக்குடியிலே வெடிகுண்டு வீசினான். அந்த சுத்தத் தமிழன் தான் பித்துக்குளிப் பிடித்து இந்த களத்திலே நிற்கிறான். அந்த சுத்தத் தமிழன் தான் இந்துத்துவத் திற்கு துணை போகிறான். அந்த சுத்தத் தமிழன் தான் மத வெறியர்களுக்குத் துணை நிற்கிறான். மத வெறியர்களுக்குத் துணை நிற்கிற சுத்தத் தமிழனை விட, மத வெறியர்களுக்கு எதிராகத் தமிழர் அல்லாத வேறொரு இனத்தில் பிறந்த அந்த போராளி தான் மேலானவர் தந்தைப் பெரியார். மனிதநேயப் போராளி, பகுத்தறிவுப் போராளி, ஆதிக்க எதிர்ப்புப் போராளி அந்த போர்க் குணம் தான் நம்மையும் அவரையும் பிணைக்கிறது, இணைக்கிறது. ஆகவே இந்த இடத்தில் மொழி என்பது முக்கியமில்லை. அவர்கள் உள்வாங்குகிற, உள் வாங்கிப் பரப்புகிற கருத்தியல் தான் முக்கியமானது.

தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்தார் என்பதற்காக நாம் அம்பேத்கரை உயர்த்திப் பிடிக்கவில்லை. நம் விடுதலைக்காக உழைத்தார் என்பதற்காகத்தான் உயர்த்திப் பிடிக்கிறோம். அம்பேத்கர் அளவிற்கு இல்லாமல் மிக உயர்ந்த பதவிகளைப் பெற்றவர் தான் நம் மதிப்பிற்குரிய பாபு ஜெகஜீவன்ராம். இந்தியாவின் பாதுகாப்புத் துறை அமைச்சராக இருந்தவர். அம்பேத்கர் பெரிய கோடீஸ்வரர் அல்ல. ஆனால், பாபு ஜெகஜீவன் ராம் பெரிய கோடீஸ்வரர். ஆனால் தினந்தோறும் இன்று நாம் பேசிக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில்கூட, இந்தியாவின் ஏதோ ஒரு மூலையில் ஒரு குக் கிராமத்தில் புரட்சியாளர் அம்பேத்கரின் உருவப் படத்தை அல்லது சிலையைத் திறந்து வைத்து அவருடைய பிறந்தநாளை ஒரு ஒடுக்கப் பட்டவன் கொண்டாடிக் கொண்டிருப்பான். அதுதான் புரட்சியாளர் அம்பேத்கரின் வெற்றி. அதற்குக் காரணம் அவர் உள்வாங்கிய கொள்கை, அவர் முன் வைத்த கொள்கை, அவர் கட்டியமைத்த களம், அவர் நடத்திய போராட்டம், அவருடைய இலட்சியம் அதுதான் முக்கியமானது. ஆகவே நாம் எப்படி இந்த இடத்தில் மொழியின் அடிப்படையில் தந்தை பெரியாரை அந்நியப்படுத்த முடியாதோ அதே போலத்தான் புரட்சியாளர் அம்பேத்கரையும் கொள்கையின் அடிப்படையில் நாம் கோட்பாட்டுத் தலைவராக உள்வாங்கியிருக்கிறோம்.

கோட்பாடுதான் அனைத்தையும் தீர்மானிக்குமே தவிர இனமும், மொழியும் அடையாளங்களே தவிர அவை தீர்மானிக்கும் சக்திகள் அல்ல. இனத் தூய்மை ஞாயமானதென்றால்! ஜாதித்தூய்மை ஞாயமானதாகிவிடும். இனத்தூய்மைவாதம் ஞாய மானதென்றால் ஜாதித் தூய்மை பேசுகிற ஜாதி வெறியர்கள் சொல்லுகிறவாதம் ஞாயமானதாகி விடும். அவன் சொல்கிறான் இந்த ஜாதியும், இந்த ஜாதியும் கல்யாணம் பண்ணக் கூடாது என்கிறான்.

எவனுக்காகப் பெரியார் பேசினாரோ அவனே செருப்பை எடுத்து வீசினான், எவனுக்காகப் பேசினாரோ அவனே அழுகிய முட்டையை எடுத்து வீசினான், அவர் மேல். எவனுக்காகப் பேசினாரோ அவனே நரகலை எடுத்து வீசினான். எல்லாவற்றையும் சகித்துக் கொண்டார். இந்த மாதிரியான யுத்தக் களத்தில் என் தன்மானத்தை விட இனமானம் தான் பெரிது என்றார். ஏன் இனமானம் பெரிது என்று கூறினார் என்றால், இனமானத்தின் மூலமாவது ஒவ்வொருவனுக்கும் தன்மானத்தை உருவாக்க முடியும் என்கிற நம்பிக்கையினால் தான் தந்தை பெரியார் அவை அனைத்தையும் சகித்துக் கொண்டார்.

தந்தை பெரியாருக்கு முன்னால் தலித் சமூகத்தை சேர்ந்த தலைவர்கள் இந்த கருத்தியலைப் பேசி யிருக்கிறார்கள், இல்லை என்று மறுக்க முடியாது. ஆனால், அடித்தட்டு வரையில், உழைக்கிற மக்களிடம் ஊர்ஊராய்ப் போய், அரசியல்வாதி ஊர்ஊராய்ப் போகிறான் என்றால் ஓட்டுக்காக, அரசியல்வாதி திருமணங்களில் கலந்து கொள்கிறார்கள் என்றால் அது வாக்குகளுக்காக! அரசியல்வாதிகள் காதணி விழாவுக்கு, சாவுக்குப் போகிறார்கள் என்றால் அது வாக்குகளுக்காக. போகவில்லையென்றால் ஓட்டு கிடைக்காது. போனால் தான் ஓட்டு கிடைக்கும். ஆனால், ஓட்டு களைப் பற்றியே கவலைபடாமல் ஊர்ஊராய் ஒரு தலைவர் போனார் என்றால் அது தந்தைப் பெரியார். எவ்வளவு பெரிய சமூக அக்கறை என்று யோசித்து பாருங்கள். அவர் ஊட்டிய தன்மானத்தைப் பெற்றவர்கள் அவரையே தமிழர் இல்லையென்று சொல்வது தான் வேதனையாக இருக்கிறது.

திமுகவின் மீது உங்களுக்கு விமர்சனம் இருக்கலாம், அது அரசியல் கட்சி. அதிமுகவின் மீது உங்களுக்கு விமர்சனமிருக்கலாம் அதுவும் அரசியல் கட்சி. அதில் நான் தலையிட விரும்ப வில்லை. திமுகவில் ஜாதி பார்த்தார்கள், ஜாதி பார்த்து வேட்பாளர்களை நிறுத்தினார்கள், அதிமுகவில் ஜாதி ஆதிக்கம் நிலைபெற்றது, அது திராவிட அரசியல் கட்சிகள். திராவிடர் கழகம் குறிப்பாக பெரியார் எடுத்த அந்த இயக்கம் என்பது ஜாதி ஒழிப்புக் களத்தில் மகத்தான பங்களிப்பு அது. ஜாதி வாழ்க என்று சொல்லுகிறவன் தந்தை பெரியாரை எதிரியாகப் பார்ப்பான். திருமாவளவன் தந்தைப் பெரியாரை தலைவராக ஏற்றுக் கொண்ட தற்குக் காரணம்? புரட்சியாளர் அம்பேத்கரைப் போல அவரை உள்வாங்கிக் கொண்டதற்குக் காரணம்? ஜாதி ஒழிக ஒழிக ஒழிக என்று ஒவ்வொரு நொடிப் பொழுதும் பேசு வதனால் தான் திராவிடர் கழகமும், தந்தை பெரியாரும் நமக்கு நட்பு சக்திகளாகத் தெரிகின்றனர்.

எந்த ஒருவன் திராவிடர் கழகத்தையும், தந்தை பெரியாரையும் பகை சக்திகளாக அடையாளப் படுத்துகிறானோ அவன் ஜாதியவாதிகளுக்கு துணை போகின்றான் என்று பொருள், இந்துத்துவத்திற்கு துணை போகிறான் என்று பொருள், இந்து மதத்தை காப்பாற்றத் துணை போகிறான் என்று பொருள். இந்த மண்ணில் நீண்ட நெடுங்காலமாக நிலைத்து நிற்கிற பார்ப்பனர் சமூகத்தினரின் ஆதிக்கத்திற்கு துணை போகிறான் என்று பொருள். பழமைவாதத்தைக் கட்டிக் காப்பாத்த துணை போகிறான் என்று பொருள். பெண்கள் விடுதலை பெறக்கூடாது என்று நினைக்கிறான் என்று பொருள். தலித்துகள் விடுதலைப் பெறக்கூடாது என்கிறான் என்று பொருள். தலித்துகளை விரோதமாகப் பார்க்கிறான் என்று பொருள். அப்படிப்பட்டவர்களால் மட்டும் தான் பெரியாரை எதிராகப் பார்க்க முடியும். பெரியாரை நாம் நண்பராக, தோழராக, தலைவராகப் பார்ப்பதற்கு காரணம்? புரட்சியாளர் அம்பேத்கர் முன்மொழிந்த அதே ஜாதி ஒழிப்புக் கருத்தியலை தந்தை பெரியார் உயர்த்திப்பிடித்தார், களமாடினார், பல கடுமையான அச்சுறுத்தல்களை எதிர் கொண்டார், விமர்சனங்களை சகித்துக் கொண்டார். அவமதிப்புகளைப் பொறுத்துக் கொண்டார். அதனால் தான் அவர் மறைந்து இத்தனை ஆண்டுகள் கடந்தும் இன்றைக்கு அவருடைய கொள்கை உயிர்ப்போடு இருக்கிறது. இன்றைக்கும் அது வலுப்பெற்று நிற்கிறது. அந்தக் களத்திலே விடுதலைச் சிறுத்தைகளும் கை கோர்த்து நிற்கிறது. தொடர்ந்து இந்தக் களத்தில் நாம் கை கோர்த்து நிற்போம். ●

## காந்தியை கொலை செய்ய 9 முறை பார்ப்பனர்கள் முயற்சி (3)

# கோட்சே ஒரு ‘இந்து’ தீவிரவாதியே!

***கோட்சே என்ற தனிமனிதனின் வெறிச் செயல் தான் காந்தி கொலை என்றும், அதை பா.ஜ.க.வோ சங்பரிவாரங்களோ ஏற்கவில்லை என்றும் பா.ஜ.க.வினர் வாதாடுகிறார்கள். கோட்சே பயங்கரவாதிதான்; ஆனால் இந்து பயங்கரவாதி என்று கூறுவது இந்து மதத்துக்கு விரோதம் என்றும் கூறுகிறார்கள். மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்காசன் வெளியிட்ட கருத்துக்கு எதிராக எழுந்த எதிர்வினைகள் இவை. கோட்சே தனி மனிதரா? ஆர்.எஸ்.எஸ். ‘இந்து’ தர்மம் – இந்துத்துவம் என்ற வலைப் பின்னலிலிருந்து கோட்சேயை தனித்துப் பிரித்தெடுக்க முடியுமா?***

***காந்தி கொலையில் பல வரலாறுகள் திரிக்கப் பட்டு உண்மைகளை மறைத்து, சங்பரிவாரங் களும் இந்துத்துவா சக்திகளும் திட்டமிட்டு பரப்புரை செய்து வருகின்றன. அது குறித்த வரலாற்று உண்மைகளை ஓரளவு இந்தக் கட்டுரையில் விளக்குகிறது.*** *(சென்ற இதழ்த் தொடர்ச்சி)*

*சுனிபாய் வைத்யா என்ற குஜராத் மாநிலக்காரர் காந்தி கொலை பற்றி சில ஆண்டுகளுக்கு முன் ஒரு நூலை எழுதினார். அப்போது அவருக்கு வயது 85. சர்வோதய இயக்கத்திலும், வினோபாவின் பூமி தான இயக்கத்திலும் பங்கு பெற்றவர். இவர் குஜராத்தில் ‘பூமி புத்ரா’ என்ற பத்திரிகையின் ஆசிரியராகவும் இருந்தவர். இந்திராவின் அவசர நிலைக் காலத்தில் 7 மாதம் சிறையில் இருந்தவர். காந்தியைக் கொன்ற கோட்சேயை - மாவீரனாக சித்தரித்து, மராட்டியத்தில் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் நாடகம் நடத்தியபோது இந்த முதியவர் கொதித்தெழுந்து, காந்தி கொலை பற்றிய ஒரு நூலை வினா-விடை வடிவத்தில் எழுதினார். குஜராத்தி மொழியில் எழுதப்பட்ட அந்த நூல் வேறு பல மாநில மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மதுரையில் ‘சர்வோதய இலக்கியப் பண்ணை’ என்ற அமைப்பின் சார்பில் - இதன் தமிழ் பதிப்பும் வெளி வந்திருக்கிறது. அதில் காந்தியைக் கொலை செய்வதற்கு - சுமார் 9 முறை முயற்சிகள் நடந்தன என்று அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.*

*1934ஆம் ஆண்டில் - பூனா நகராட்சியின் வரவேற்பு விழாவில் பங்கேற்க காந்தியடிகள் சென்றபோது, அவர் மீது வெடிகுண்டு வீசும் முயற்சி நடந்தது. வெடிகுண்டு காந்தியடிகளின் காருக்கு முன்னால் சென்று கொண்டிருந்த காரின் முன்னால் விழுந்ததால், அவர் உயிர் தப்பினார். இந்த குண்டு வீச்சில், தலைமை நகராட்சி அதிகாரியும், இரண்டு காவல்துறை அதிகாரிகள் உள்பட 6 பேரும் படுகாய மடைந்தனர். (இது குறித்து இராமச்சந்திர குகா தரும் தகவல் வேறு இடத்தில் வெளியிடப்பட்டுள்ளது)*

*அதன் பிறகு 1944ஆம் ஆண்டு இதே நாதுராம் வினாயக் கோட்சே, காந்தியைக் கொலை செய்ய முயற்சித்தார். ‘பஞ்சக்கனி’ என்ற இடத்தில் நாதுராம் கோட்சே, கையில் கத்தியுடன், காந்தியைக் குத்திக் கொலை செய்வதற்கு ஓடினார். அப்போது காந்தியுடனிருந்த, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.டி. பிசாரே என்பவர், பாய்ந்து சென்று, கோட்சேயின் கையிலிருந்த கத்தியைப் பிடுங்கி, காந்தியின் உயிரைக் காப்பாற்றினார்.*

*இது தொடர்பாக வழக்கு தொடரப்பட்டது. பூனேயில் உள்ள காரத்தி என்னும் தங்கும் விடுதியின் உரிமையாளரான மணி சங்கர் புரோகித் என்பவர், இந்த சம்பவத்தை நேரில் பார்த்தவர் என்பதால் சாட்சி கூறினார். அந்தச் சம்பவம் நடந்த உடனேயே, தன்னைக் கொலை செய்ய வந்த கோட்சேயை, தாம் சந்திக்க வேண்டும், அவரோடு விவாதிக்க வேண்டும் என்று காந்தி விரும்பி, அவரை அழைத்து வரப் பணித்தார். ஆனால், கோட்சே, காந்தியை சந்திக்க மறுத்துவிட்டார்.*

*1944ஆம் ஆண்டு காந்தியை கொல்ல மற்றொரு முயற்சி நடந்தது. அப்போது அவர் வார்தாவிலிருந்து பம்பாய்க்கு, ஜின்னாவைச் சந்திக்க புறப்பட இருந்த நேரம். இத்திட்டத்தை முறியடித்து, காந்தி-ஜின்னாவின் சந்திப்பு நடக்கவே கூடாது என்று ஒரு தீவிரவாதக் குழு திட்டமிட்டது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காகவே அந்தக் குழு வார்தாவுக்கு வந்திருந்தது. உளவுத் துறையின் வழியாக இந்தத் தகவல் காந்தியடிகளிடம் தெரிவிக்கப்பட்டவுடன், இவர் இந்தக் குழுவை சந்தித்து விட்டுத்தான் பம்பாய் போவேன் என்று கூறி விட்டார். ஆனால், பாதுகாப்புக் கருதி, காவல்துறை அதற்கு அனுமதிக்க*



**“இதுவரை கொலை முயற்சியிலிருந்து எனது உயிர் 7 முறை காப்பாற்றப்பட்டிருக்கிறது. நான் அவ்வளவு சீக்கிரம் இறந்து விட மாட்டேன். நூற்று இருபத்தைந்து ஆண்டுகள் வரை நான் உயிர் வாழ்வேன்” என்றார் காந்தி.**

*மறுத்துவிட்டது. தீவிரவாதிகளின் குழுவையும் காவல்துறை பிடித்துவிட்டது. அந்தக் குழுவிலிருந்த தாட்டே என்பவர் கையில் ஒரு கத்தியை வைத்திருந் தார் . விசாரணையில், காந்தியின் பயணத்தைத் தடுக்கும் நோக்கத்துடனேயே வந்ததாக ஒப்புக் கொண்டார்கள். காந்தியின் உயிருக்கு ஆபத்தை உருவாக்குவதே, இந்தத் தீவிரவாதக் குழுவின் திட்டம் என்று, புனே மாவட்ட காவல்துறை அதிகாரி, காந்தியின் செயலாளர் பியாரிலாலுக்கு அவசரமாக தொலைபேசி மூலம் எச்சரிக்கை செய்தார்.*

*1946ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் மற்றொரு கொலை முயற்சி நடந்தது. அப்போது காந்தியடிகள் சிறப்பு இரயில் மூலம் புனாவுக்குச் சென்றுக் கொண்டிருந்தார். அந்தச் சிறப்பு இரயில் ‘நேரல்’ என்ற ஊருக்கும், ‘கர்ஜத்’ என்ற ஊருக்கும் இடையே வந்து கொண்டிருந்தபோது, தண்டவாளத்தின் மீது பாறாங்கற்களைப் போட்டு இரயிலைக் கவிழ்க்கும் சதி நடந்தது. இரயில் ஓட்டுநரின் திறமையால் விபத்து தவிர்க்கப்பட்டது. ஆனால், இன்ஜின் பலத்த தேசத்துக்குள்ளானது. தொடர்ந்து இப்படி கொலை முயற்சிகள் நடந்து கொண்டே இருந்தன. அதனைத் தொடர்ந்து காந்தியடிகளே ஒரு வழிபாட்டுக் கூட்டத்தில் இவ்வாறு பேசினார்.*

*“இதுவரை கொலை முயற்சியிலிருந்து எனது உயிர் 7 முறை காப்பாற்றப்பட்டிருக்கிறது. நான் அவ்வளவு சீக்கிரம் இறந்து விட மாட்டேன். நூற்று இருபத்தைந்து ஆண்டுகள் வரை நான் உயிர் வாழ்வேன்” என்றார். அதற்கு பதிலளித்து - உடனே நாதுராம் கோட்சே தான் நடத்தி வந்த ‘அக்ரனி’ என்ற மராத்திய பத்திரிகையில் எழுதினார். “அதுவரை யார் உங்களை உயிருடன் விட்டு வைக்கப் போகிறார்கள் பார்ப்போம்” என்று. அதற்குப் பிறகு 1948ஆம் ஆண்டு ஜனவரி 20இல் நடந்த வெடிகுண்டு வீசும் முயற்சி நடந்தது.*

*காந்தியார் - சுட்டுக் கொல்லப்படுவதற்கு 10 நாள் களுக்கு முன்பு அவரை தீர்த்துக்கட்ட ஒரு முயற்சி நடந்தது.*

*இந்த சதிக்கான திட்டம் வகுத்தவர்கள் : 1. நாராயணன் ஆப்தே (சித்பவன் பார்ப்பனர்), 2. நாதுராம் கோட்சே (சித்பவன் பார்ப்பனர்), 3. கோபால் கோட்சே (சித்பவன் பார்ப்பனர்), 4. மதன்லால் (பார்ப்பனர்), 5. விஷ்ணு கார்க்கோர், 6. திகம்பர் பேட்கே.*

*இவர்கள் எல்லாம் சேர்ந்து நடத்திய கூட்டு சதி!*

*1948 ஜனவரி 19ஆம் தேதி டில்லி ‘கன்னாட் சர்க்கில்’ பகுதியிலுள்ள மெரீனா ஓட்டலில் இந்தக் கூட்டம் தங்குகிறது! காந்தியார் பிர்லா மாளிகையிலே தங்கியிருக்கிறார். அப்போதுதான் காந்தியார் தனது உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டு பாகிஸ்தானுக்குச் செல்ல முடிவெடுத்த நேரம்! கோபால் கோட்சே காந்தியாரின் வழிபாட்டுக் கூட்டத்துக்கு வந்து, இடங்களை எல்லாம் பார்வையிடுகிறான். காந்தியாரை கோபால் கோட்சே பார்த்ததே - அதுதான் முதல் முறை. எப்படி காந்தியாரை தீர்த்துக் கட்டுவது என்பதற்கான முன்னோட்டத்திற்காக கோபால் கோட்சே அங்கு வருகிறான்; 20ஆம் தேதி மாலை 5 மணிக்கு காந்தியாரை தீர்த்துக் கட்டுவது என்று முடிவெடுக்கப் படுகிறது. 19ஆம் தேதி காலையும் ஆப்தே, திகம்பர் இருவரும் வந்து பார்வையிட்டு செல்கிறார்கள்; அறைக்குத் திரும்பியவர்கள் வெடிகுண்டுகளை தயார்படுத்திக் கொள்கிறார்கள்; யார் யாருக்கு என்னென்ன வேலை என்று பிரிக்கப்படுகிறது.*

*மதன்லால் - காம்பவுண்டு சுவரில் வெடிகுண் டோடு இருக்க வேண்டும். முதலில் இவன் வெடி குண்டை வீசி கூட்டத்தில் குழப்பத்தை ஏற்படுத்த வேண்டும். திகம்பர் பேட்கே, கோபால் கோட்சே ஆகிய இருவரும் காந்தியார் பேசிக் கொண்டிருக்கும் இடத்திற்குப் பின்னால் உள்ள வேலைக்காரர் தங்கும் அறையில் வெடிகுண்டோடு இருக்க வேண்டும். அங்குள்ள ஜன்னல் வழியாக வெடிகுண்டை காந்தியார் மீது வீசுவது என்பது திட்டம். வேலைக்காரர்களிடம் காந்தியாரை போட்டோ எடுக்க வந்ததாக சொல்லிவிட வேண்டும்; காம்பவுண்டு சுவரில் உள்ள மதன்லால் வெடி குண்டை வீசி வெடித்தவுடன் கூட்டத்தில் குழப்பம் ஏற்படும். அப்போது - வேலைக்காரர் அறையிலிருந்து ஜன்னல் வழியாக காந்தியார் மீது ஒருவன் வெடிகுண்டை வீச வேண்டும். இன்னொருவன் துப்பாக்கியால் சுட வேண்டும்; இதைத் தவிர கூட்டத்தோடு கூட்டமாக உட்கார்ந்திருக்கும் கார்க்கோர் என்பவனும் காந்தியார் மீது ஒரு வெடிகுண்டை வீச வேண்டும்; நாதுராம் கோட்சே, நாராயணன் ஆப்தே ஆகிய இருவரும் இவைகளை எல்லாம் கண்காணிக்க வேண்டும் என்று முடிவெடுக் கப்பட்டது.*

*தங்கியிருந்த ஓட்டலை விட்டு இருவர் இருவராக தனித்தனியே வெளியே கிளம்பினார்கள்; வெடிகுண்டுகள் சகிதமாக! அந்த நேரத்திலும் ஆப்தே - டாக்சிக்காரருடன் பேரம் பேசிக் கொண்டிருந்தான்! திட்டமிட்ட வாறு - அந்தந்த இடத்துக்கு எல்லோரும் சென்றனர்! காந்தியாரின் பிரார்த்தனைக் கூட்டம் துவங்கியது! வேலைக்காரர் அறைக்குள் சென்ற பேட்கேவுக்கு ஓர் அதிர்ச்சி! அங்கே இருந்த வேலைக்காரனுக்கு ஒற்றைக் கண்! ஒற்றைக்கண் மனிதர் ஒரு அபசகுனம் என்பது இந்து தர்மத்தின் நம்பிக்கை! அதனால் பேட்கே நடுங்கிப்போய் வெளியே ஓடிவந்துவிட்டான்!*

*உள்ளே இருந்தது கோபால் கோட்சே மட்டும்தான். ஆனால் எந்த ஜன்னல் வழியாக காந்தியாரை நோக்கி சுட வேண்டுமோ அந்த ஜன்னலுக்கும், காந்தியார் அமர்ந்திருந்த மேடைக்கும் உயரம் வித்தியாசமாக இருந்தது. அந்த ஜன்னல் வழியே காந்தியாரைக் குறி வைத்துப் பார்க்க முடியவில்லை; கோபால் கோட்சேவுக்கு இது மிகப் பெரிய ஏமாற்றமாகிவிட்டது. என்ன செய்வதென்றே தெரியவில்லை. காம்பவுண்டு சுவரில் தயாராக இருந்த மதன்லால் என்ற பார்ப்பனன், சமிக்ஞை கிடைத்த வுடன் அமைதியாக ஒரு சிகரெட்டை எடுத்துப் புகைத்தான்; அந்த சிகரெட் நெருப்பைக் கொண்டு - காலுக்கு அடியில் இருந்த வெடிகுண்டைப் பற்ற வைத்து - வீசினான்; குண்டு வெடித்துவிட்டது; கூட்டத்தில் குழப்பம். இப்போது ஜன்னல் வழியே காந்தியாரை நோக்கிச்சுட வேண்டிய நேரம்; கோபால் கோட்சே ஒன்றும் புரியாமல் விழித்துக் கொண்டிருக்கிறான்; திட்டம் தோல்வியில் முடிகிறது! போலீசார் - மதன்லாலைக் கைது செய்தனர்; மற்றவர்கள் தப்பி ஓடி விடுகின்றனர்; போலீசார் அவர்கள் தங்கியிருந்த ஓட்டலுக்கு சோதனையிடச் செல்வதற்குள் எல்லோருமே தப்பிவிட்டனர்!*

*குண்டு வெடித்தபோது - காந்தியார் அமைதி யாகப் பேசிக் கொண்டிருந்தார்! உண்ணாவிரதத்தால் உடல்நலிவுற்ற அவரை - ஒரு நாற்காலியில் உட்கார வைத்து தூக்கி வந்திருந்தார்கள்; பேச முடியாத உடல் பலவீனம்; அருகே இருந்த சுசீலா நய்யார் குண்டு வெடித்தவுடன் அலறுகிறார். அப்போது காந்தியார், “பிரார்த்தனைக் கூட்டம் நடக்கும்போது சாவதை விட - வேறு நல்ல சாவு ஏது?” என்று கேட்டுவிட்டு கூட்டத்தினரைப் பார்த்து அமைதிப்படுத்துகிறார். அருகே இருக்கும் இராணுவப் பயற்சி முகாமில் ஒத்திகை நடந்திருக்கிறது; வேறு எதுவும் இல்லை என்று சமாதானப்படுத்திவிடுகிறார்; அதற்கு சரியாக 10ஆவது நாளில் - அதே பார்ப்பனர் கூட்டம் காந்தியாரைத் தீர்த்துக் கட்டிவிடுகிறது!* ●

**‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வங்கிக் கணக்கு**

*கரூர் வைஸ்யா வங்கி, அடையாறு கிளை,*

*‘கரண்ட்’ அக்கவுண்ட்*

*எண் : 1257115000002041*

IFSC KVBL0001257

தொடர்புக்கு:

ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு,

திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.

✆ **7373684049**

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# பார்ப்பன ஆதிக்கத்தில் புதிய நாடாளுமன்றம்

17 ஆவது நாடாளுமன்றத்தில் பார்ப்பன உயர்ஜாதியைச் சார்ந்தவர்கள் 232பேர். மக்கள் தொகையில் 60 சதவீதத்துக்கு மேல் உள்ள பிற்படுத்தப்பட்டோரில் 120 பேர் மட்டுமே நாடாளுமன்ற உறுப்பினர்கள்.

அரசியல் சட்டப்படி பட்டியல் இன / பழங்குடிப் பிரிவினருக்கு இடஒதுக்கீடு செய்ய வேண்டியது கட்டாயம் என்பதால் பட்டியல் இனப் பிரிவில் 86 உறுப்பினர்களும் பழங்குடிப் பிரிவில் 52 பேரும் இடம் பெற்றுள்ளனர். மத அடிப்படையில் மைனாரிட்டிகள் 52 பேர் மட்டுமே இடம் பெற்றுள்ளனர்.

தமிழ்நாட்டில் தேர்தல் நடைபெற்ற 38 இடங்களில் வெற்றி பெற்றவர்களில் 30 பேர் பிற்படுத்தப்பட்டவர், மிகவும் பிற்படுத்தப்பட் டவர், தாழ்த்தப்பட்டவர் 7 பேர், பார்ப்பனர் ஒருவர் (கோவை நாடாளுமன்ற உறுப்பினர்).

ஆனால் மற்ற மற்ற மாநிலங்களின் நிலை என்ன? மொத்தம் 542 உறுப்பினர்களில் பார்ப்பனர் உள்ளிட்ட உயர்ஜாதியினரின் எண்ணிக்கை 232, பிற்படுத்தப்பட்டவர் 120, தாழ்த்தப்பட்டவர் 86, மலைவாழ்மக்கள் 52 பேர், சிறுபான்மையினர் 52 பேர்.

தெலுங்கானாவை எடுத்துக்கொண்டால் மொத்தம் 17 பேர்களில் பார்ப்பனர் 7 பேர், பிற்படுத்தப்பட்டவர் 3 பேர், தாழ்த்தப்பட்டவர் 5 பேர், டில்லியில் 5 பேர் பார்ப்பனர், ஒருவர் பிற்படுத்தப்பட்டவர், மற்றவர் தாழ்த்தப்பட்டவர்.

ஒட்டு மொத்தமாக சொல்லப்போனால் பிஜேபி சார்பில் 105 பார்ப்பனர்களும், காங்கிரசு சார்பில் 12 பார்ப்பனர்களும் வெற்றி பெற்றுள்ளனர். இந்தப் புள்ளி விவரங்கள் கூறுவது என்ன?

பாரதீய ஜனதா என்றாலே பார்ப்பன ஜனதா என்பது தெளிவாகவில்லையா? 100க்கு 3 சதவீதத்தினருக்கு எப்படி 105 இடங்கள்.

சித்தாந்த ரீதியான போராட்டம் என்பது தமிழ்நாட்டில் தான் நடந்திருக்கிறது - மற்ற மாநிலங்களில் அது நடைபெறாததற்குக் காரணம் தமிழ்நாட்டைப் போல் தந்தை பெரியார் கண்ட இயக்கம் இல்லாதது தான்.

பிஜேபி ஆட்சி என்பது சமுகநீதிக்கு எதிரான ஆட்சியே!

# மின்வாரியத் துறையிலும் வடநாட்டுக்காரனா?

தமிழ்நாட்டில் உதவி மின் பொறியாளர் பணிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள 325 பேரில் 36 பேர் வடமாநிலங்களையும் வெளி மாநிலங்களையும் சேர்ந்தவர்கள் என்ற செய்தி தமிழகத்தில் அதிர்ச்சி அலைகளை உருவாக்கியிருக்கிறது. இதற்காக தமிழ்நாட்டைச் சார்ந்த 80,000 பேர் இப்பதவிக்கு விண்ணப்பித்திருந்தனர். இதிலிருந்தே பொறியாளர்கள் பட்டம் பெற்ற இளைஞர்களிடம் வேலை இல்லாத் திண்டாட்டம் எவ்வளவு அதிகமாக இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும். வட மாநிலத்துக்காரர்கள் தமிழ்நாட்டில் அரசு வேலை வாய்ப்புகளைப் பறிப்பதற்கான காரணம் தமிழ்நாட்டில் அ.இ.அ.தி.மு.க. கட்சியின் தவறான கொள்கைதான்.

2013ஆம் ஆண்டு வரை தமிழக அரசுப் பணிகளுக்கு தேர்வாக வேண்டுமெனில் தமிழ்நாட்டில் அரசு வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருக்க வேண்டும். தமிழ் மொழிக் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும். இந்த விதியை 2016ஆம் ஆண்டு அ.இ.அ.தி.மு.க. ஆட்சி திருத்தி தமிழக அரசுப் பணிகளில் வெளி மாநிலத்தவரும் விண்ணப்பிக்கலாம். தமிழக அலுவல் மொழியான தமிழை வேலைக்குச் சேர்ந்து, இரண்டு ஆண்டுகளில் கற்றுக் கொள்ளலாம் என்று திருத்தியது. இதன் காரணமாகவே தமிழக அரசு வேலை வாய்ப்புகளில் வடநாட்டார் நுழைய ஆரம்பித்து விட்டார்கள். கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பு தமிழ்நாடு மின் வாரியம் தொழில்நுட்ப உதவியாளர் பணிக்கு பணியாளர்களை தேர்வு செய்தது. அதிலும் 12 பேர் வட மாநிலங்களைச் சார்ந்தவர்கள்.

தமிழ்நாட்டில் ஏற்கனவே மத்திய அரசு நிறுவனங்கள், அலுவலகங்களிலும், பொதுத் துறை நிறுவனங்களிலும் வடநாட்டுக்காரர்கள் முறைகேடாக குறுக்கு வழிகளில் நுழைந்து வருகிறார்கள். இப்போது தமிழக அரசுப் பணிகளிலும் வடநாட்டுக்காரர்கள் நுழையத் தொடங்கி விட்டனர்.

திராவிடர் விடுதலைக் கழகம் தொடர்ந்து வடநாட்டுக்காரர்கள் திணிப்பை எதிர்த்துப் போராடி வருகிறது. பல்வேறு சமூக இயக்கங்களும் அரசியல் கட்சிகளும் இதை வன்மையாகக் கண்டித்து வருகின்றன.

# கழகத் தோழர் வி.கஜேந்திரன் - மோகனப்ரியா இணையேற்பு விழா

12.5.2019 அன்று மாலை 6 மணியளவில் குடியாத்தத்தில் கழகத் தோழர் வி.கஜேந்திரன் - மோகனப்ரியா - இணையேற்பு விழா சிறப்புடன் நடந்தது

கழகத் தலைவர், கழகப் பொதுச் செயலாளர், மருத்துவர் எழிலன் மற்றும் கழக முன்னோடிகள், அம்பேத்கரிய அமைப்பைச் சேர்ந்த தோழர்களும் கலந்து கொண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.



பறை இசை கலை நிகழ்ச்சிகளும் மண விழா மேடையில் அரங்கேறியது.

# அமைச்சரவையிலும் ‘அவாள்’ ஆதிக்கம்

பிரதமர் மோடி இரண்டாம் முறையாக நேற்று பதவியேற்ற நிலையில் அவரோடு புதிய அமைச்சர்களும் பதவியேற்றுள்ளனர். தேர்தல் பிரச்சாரங்களில் தான், மிகவும் பிற்படுத்தப்பட்டவர் என்பதால் தன் மீது பலரும் பொறாமை பிடித்து தாக்குதல் நடத்துகிறார்கள் என்று குறிப்பிட்டார் மோடி.

ஆனால் அவரது அமைச்சரவையில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை விட உயர் சாதியினரே அதிகம் இருக்கிறார்கள் என்பது தெரியவந்துள்ளது. அதன்படி பதவியேற்ற 58 அமைச்சர்களில் உயர் சாதியினர் - 32; பிற்பட்ட வகுப்பினர் -13; பட்டியல் இனத்தவர் - 6; பழங்குடியினர் - 4; சீக்கியர் - 2; இஸ்லாமியர் - 1.

மக்கள் தொகையில் சுமார் 50-60% உள்ள பிற்பட்ட வகுப்பினருக்கு 13 அமைச்சர்கள், சுமார் 10-15% உள்ள உயர்சாதியினருக்கு 32 அமைச்சர்கள், இட ஒதுக்கீடு இருப்பதால் எம்.பி.க்களான தாழ்த்தப்பட்ட பழங்குடியினருக்கு 10 அமைச்சர்கள் (இட ஒதுக்கீடு இல்லை எனில்!), சுமார் 14% உள்ள இஸ்லாமியருக்கு ஒரே ஒரு அமைச்சர் பதவிதான் கிடைத்திருக்கிறது.

நிதித் துறை அமைச்சராக்கப்பட்டுள்ள நிர்மலா சீத்தாரமன் ஒரு பார்ப்பனர்; திருவரங்கத்தில் பிறந்து, திருச்சியில் கல்லூரிப் படிப்பைப் படித்தார் என்பதோடு அவரது தமிழ்நாட்டு தொடர்பு முடிந்து விட்டது. அவரைத் தமிழர் என்று பா.ஜ.க. வினர் கூறுகிறார்கள். மற்றொருவர் முன்னாள் வெளியுறவு செயலாளராக இருந்த விஜயசங்கர். இப்போது அவர் வெளி விவகாரத் துறை அமைச்சர். அவரது தந்தை சுப்பிரமணியம், திருச்சியில் பிறந்தவராம். விஜயசங்கருக்கும் தமிழ்நாட்டுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அவர் படித்தது எல்லாம் வேறு மாநிலத்தில். அவர் தமிழ்நாட்டைப் பூர்வீகமாகக் கொண்டவர் என்ற செய்தியே அவர் அமைச்சராகப் பதவியேற்றப் பிறகுதான் தமிழ்நாட்டு மக்களுக்கே தெரியும். இவரும் ஒரு பார்ப்பனர்.

பார்ப்பனர்கள் எப்போதுமே எந்த மாநிலத்தோடும் மாநிலத்தில் வாழும் தேசிய இனமக்களோடும் அடையாளப்படுத்திக் கொள்ளாதவர்கள். எந்த மாநிலத்தில் பிறந்தாலும் ‘சமஸ்கிருதம்-வேதம்-கீதை’ என்ற பண்பாட்டை உயர்த்திப் பிடிப்பவர்கள். மாநிலத்தில் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இடஒதுக்கீட்டை எதிர்ப்பவர்கள். எந்தத் தேர்தல் களத்தையும் சந்திக்காமல் நிதியமைச்சராகவும் வெளிநாட்டுத் துறை அமைச்சராகவும் ‘ஜாக்பாட்’ பரிசு பார்ப்பனர்களுக்கு மட்டுமே கிடைக்கும். பார்ப்பன ஆதிக்கம் எங்கே இருக்கிறது என்று கேள்வி கேட்போர், இதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

## கழகக் கட்டமைப்பு நிதி: தோழர்களின் பேரார்வம்

கோவை விடியல் நண்பர்கள் ரூ. 4,20,000

(27.5.2019 அன்று மாலை திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொருளாளர் திருப்பூர் துரைசாமி, அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, பரப்புரை செயலாளர் பால் பிரபாகரன், கோவை மாவட்டக் கழகத் தோழர்கள் விடியல் நண்பர்கள் குழுவினரைச் சந்தித்தபோது தங்கள் நிதியுடன் திரட்டிய நிதியையும் சேர்த்து ரூ. 4,20,000த்தைக் கழகத் தலைவரிடம் வழங்கினர். இவர்கள் ஏற்கனவே ரூ. 20,000 வழங்கியுள்ளனர்.)

அ.மாசிலாமணி (கீழப்பாவூர்) ரூ. 25,000

கோவை, ஈரோடு, திருப்பூர் மாவட்ட சார்பில் ரூ. 4,35,000

(ஈரோடு, கோவை, திருப்பூர் மாவட்டக் கழக கட்டமைப்பு நிதி ஒப்படைப்பு நிகழ்ச்சி 27.05.2019 அன்று கழகப் பொருளாளர் துரைசாமி இல்லத்தில் நடைபெற்றது. நிகழ்வில் ஈரோடு, கோவை, திருப்பூர் மாவட்டத் தோழர்கள் கலந்து கொண்டு முதல் கட்டமாக ரூ.4,35,000 (நான்கு இலட்சத்து முப்பத்தி ஐயாயிரம்) ரூபாயை கழகத் தலைவரிடம் ஒப்படைத்தனர்)

### மேட்டூர் நாத்திகர் விழாவில்...

மேட்டூரில் மே 25 அன்று நடைபெற்ற நாத்திகர் விழாவில் கட்டமைப்பு நிதியை கழகத் தோழர்கள் கழகத் தலைவர், பொதுச் செயலாளரிடம் நேரில் வழங்கினர்.

| | | |
|---|---|---|
| பெங்களூர் எம்.ஜி.ஆர் மணி | ரூ. | 10,000 |
| பெங்களூர் தயாளன் | ரூ. | 2,000 |
| நாமக்கல் மாவட்டக் கழக சார்பில் | ரூ. | 1,14,000 |
| ஈரோடு மாவட்டம் சார்பில் நாத்திக ஜோதி | ரூ. | 50,000 |
| தர்மபுரி மாவட்டக் கழக சார்பில் வேணுகோபால் | ரூ. | 50,000 |
| சேலம் மேற்கு மாவட்டக் கழக சார்பில் கழகப் பொறுப்பாளர்கள் சூர்ய குமார் மேட்டூர் சி. கோவிந்தராஜ் | ரூ. | 60,000 |
| கோவை சண்முகம் | ரூ. | 10,000 |
| சேலம் வேணுகோபால் | ரூ. | 20,000 |
| விருதுநகர் செந்தில்குமார் | ரூ. | 5,000 |
| தஞ்சை பொறியாளர் முத்து. மணிவண்ணன் | ரூ. | 50,000 |
| பட்டுக்கோட்டை கு. பாரி | ரூ. | 10,000 |
| பேராவூரணி திருவேங்கடம் பெரியசாமி (ஏற்கனவே கழக ஏட்டில் படத்துடன் வெளி வந்துள்ளது) | ரூ. | 20,000 |
| சென்னை கழகத் தோழர் யுவராஜ் வழியாக | ரூ. | 55,000 |

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 6th June 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN